உ

சிவமயம்.

தஞ்சைமாநகரம், மேலவீதி

காமாட்சியம்மைபதிகம்.

தஞ்சைமாநகரத்தைச்சார்ந்த கருந்தட்டான்குடி

ந. வீரபத்திரபிள்ளையவர்கள்

இயற்றியது.

இஃது

தஞ்சைமாநகரம், சதாவதானம்

சுப்பிரமணியஐயாவர்களது

சென்னபட்டணம்

வித்தியாவர்த்தனி அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

பிரமாதிஹ ஆடிமீ

உ
சிவமயம்.

தஞ்சைமாநகரம்

காமாட்சியம்மைபதிகம்.

காப்பு.

நேரிசைவெண்பா.

நற்புகழ்சேர் தஞ்சை நகர்மேலை வீதியில்வாழ்
அற்புதஞ்சேர் காமாட்சி யம்மையெழிற்—பொற்பதத்திற்
கோர்பதிகத் தார்புனைதற் கோர்போ தகமுகன்றே
ளூர்பதுமத் தாளிறைஞ்சு வாம்.

ஆசிரியவிருத்தம்.

சீர்கொண்டநித்யமங் களகுணாகர திவ்ய
தேசோமயப்ரவாகி
சிங்காரிசவுரிபரி பூரணிசதாசர்வ
சீவரட்சகநாரணி
வார்கொண்டகருணை சமுத்ரிதிரியம்பகிமெய்
வாணிபுகழும்புராணி
மாதங்கிவீரிதிரி சூலியாமளேயிமய
வல்லிநிர்க்குணசாம்பவி
ஏர்கொண்டவாலைபர மாநந்தியேகாம்ப
ரேஸ்வரியெனத்துதித்துன்
இணையடியிலனவரத மனமருவிமனனமுறு
மின்பானுபோகமருள்வாய்
ஆர்கொண்டவானத் துலாவுபொன்னெயில்சூழு
மணிமேவுதஞ்சைநகர்வாழ்
அம்மைதிர்மாட்சியமை மும்மைசேர்காட்சியரு
ளம்மைகாமாட்சியுமையே. (க)

னாமேவியற்கைமண மருவிவளரளகமும்
வரிபடுமலர்ச்சுடிகையும்
மத்தகச்சுட்டியுஞ் சிந்தூரத்திலதமும்
வள்ளைக்குழைச்செவிகளும்
பாமேவுவர்க்கருளு முக்கணொளிர்வதனமும்
பவளவாயமுதமொழியும்
பைம்பொன்மங்கலநாண் கழுத்துமிருகைவளைப்
பந்தியும்பணிகொண் மார்புந்
தேமேவுவாரிணைக் கொங்கையுங்கோசிகச்
சிற்றிடையினொட்டியாணமுஞ்
சிலம்பொலிமுழங்கிரு நலம்புயபதங்களுஞ்
சிறுவனேன்காண வருவாய்
ஆமேவுபுவிராசர் கவிராசர்புகழ்செய்யு
மணிமேவுதஞ்சைநகர்வாழ்
அம்மைதிர்மாட்சியமை மும்மைசேர்காட்சியரு
ளம்மைகாமாட்சியுமையே. (௨)

பொன்னவனிமாதெனுந் திரிவிதவவாவிற்
பொருந்தியுழல்சிந்தையையொரீஇப்
பூரணேகாக்ரமாச் சாதனசதுட்டயப்
புண்யசம்பத்தைமருவுற்
றன்னமயகோசமுத லைவகைவிகாரமா
மங்கமூன் றின்சாட்சியா
யறிவகண்டாகார வற்புதாநந்தநின்
னருளெனுந்துரியவீட்டில்
மன்னுமெய்யடியரோ டென்னையுங்குடியேற்றி
வைப்பதென் றுளுணைப்பாய்
வளர்நேமிபுகழ்வாமி சிவகாமியபிராமி
மருவுஞ்சகஸ்த்ரநாமி

அன்னவாகனனாதி விண்ணவர்களும்பரவு
மணிமேவுதஞ்சைநகர்வாழ்
அம்மைதிர்மாட்சியம்மை மும்மைசேர்காட்சியரு
ளம்மைகாமாட்சியுமையே. (௩)

கந்தர்ப்பநகர்தானு வின்மகன்சொற்பனக்
காட்சிசுத்தியினிரசிதங்
கஞ்சனத்தோற்றமுய லுலவைபழுதையினரா
கானனீர்வானத்தர
விந்தம்வந்த்யாபுத்ர னிந்த்ரசாலமுமென்ன
மித்தையாய்த்தோற்றுமுலகை
மெய்ம்மையெனநம்பியுழல் புன்மையேனுய்யநின்
மெய்யருளளித்தாளுவாய்
சுந்தரசிதந்தர சலட்சணவிலட்சண
சுமூத்ரிதிரிவிக்ரமன்றன்
சோதரிசர்வாதரி சுபாகரிபராபரி
தொழும்பருக்கருண்மாதரி
அந்தணர்கள்வந்துதுதி சந்ததமுவந்துபுரி
யணிமேவுதஞ்சைநகர்வாழ்
அம்மைதிர்மாட்சியமை மும்மைசேர்காட்சியரு
ளம்மைகாமாட்சியுமையே. (௪)

நின்கழற்றுதிபுரியு மன்பரிதயப்பதியி
னீநிரந்தரமருவலால்
நின்னுடற்பங்கிலுறை நின்மலனிருப்பனவ
னிறுவலாலவனூர்தியாங்
தென்கமலவிழிமாலு முறைவனவனுறைவதாற்
செல்வியெண்மருமேவுவார்
செய்யதாய்தந்தையர் வசிப்பதாற்சேயனுந்
திசைமுகனும்வீற்றிருப்பன்

தன்கணவனுறுதலாற் கலைமகளுமுறைகுவாள்
சகலவேதார்த்தம்வெளியாகு
சத்துவநன்முத்திநிலை யுற்றிடவுமற்றையோர்
தவமுளுற் றிடல்வேண்டுமோ
அங்கயல்கடாவிவளர் செங்குவளைவாவிசூ
ழணிமேவுதஞ்சைநகர்வாழ்
அம்மைதிர்மாட்சியமை மும்மைசேர்காட்சியரு
ளம்மைகாமாட்சியுமையே. (ரு)

கத்துதிரையத்திசூ ழித்தலமனைத்தையுங்
காத்தருளுமகிபனின்புங்
கனகநாட்டிமையவர்க் கிறைவனுமாயிரங்
கண்ணணெய்திடுமின்பமுங்
சித்தர்விஞ்சையருரகர் கின்னரராருந்தவர்
திசாதிபர்பொருந்துமின்புஞ்
செங்கமலவயனுதி புங்கவர்களின்பமுஞ்
செப்புமற்றையரின்பமுஞ்
சுத்தநின்மெய்யடிய ருக்கடிமையாளர்தஞ்
சுகமதற்கிணையாகுமோ
சுயவீரிகவுமாரி விடையூரிமகிழ்நாரி
தொண்டருக்கருளுதாரி
அத்தமயமுதயமறு நித்யசிற்சோதியா
யணிமேவுதஞ்சைநகர்வாழ்
அம்மைதிர்மாட்சியமை மும்மைசேர்காட்சியரு
ளம்மைகாமாட்சியுமையே. (சா)

பொய்க்கடமெடுத்துலகி லிற்றைவரையுற்றவப்
போதுபோக்கினனலாலுன்
பொன்னங்கழற்கணென துள்ளங்கனிந்தன்பு
புரிதரற் குரியேனிலை

மைக்கடுவினுக்குநிக ரக்கமடமாதர்பால்
வாஞ்சையையொழித்தேனிலே
மறையாகமாதிசொலு முறையாகமாதிமயல்
மாற்றியுணர்வுற்றேனிலே
மெய்க்கருணைவைத்திடா தித்தநியில்விடுவையேல்
வெய்யனேனுய்வதெந்நாள்
விளைகாலுமலர்தாவி முறைகூவியுளமேவி
வேண்டுவார்க்கருள்செய்தேவி
ஐக்கவடிவாகிநிறை முக்கட்பிராட்டியே
யணிமேவுதஞ்சைநகர்வாழ்
அம்மைதிர்மாட்சியமை மும்மைசேர்காட்சியரு
ளம்மைகாமாட்சியுமையே. (எ)

உன்பதம்வழுத்திமுன் னும்பர்முதலிம்பர்களு
முயர்பதமடைந்தனர்களென்
றோதுறும்பண்டைமொழி நம்பியின்றுன்சரணை
யுன்னுமடியேன்றுயரைநீத்
தின்பநிலைதந்திடா யாகினினைமெய்யநிரு
றெல்லோருநகைசெய்குவார்
ஏழைகட்குற்றதுணை தெய்வமெனவையத்
தியம்புமொழிபொய்யாகுமே
வன்பிரும்புள்ளத்த னயினுமிரங்கியருள்
வைப்பதுன்பாரமம்மா
வனமாலிபுகழ்சிவி திரிசூலியநுகூலி
மன்னுகருணைப்ரவாகி
அன்பரகமென்னமல ரம்புயத்தகழிரு
மணிமேவுதஞ்சைநகர்வாழ்
அம்மைதிர்மாட்சியமை மும்மைசேர்காட்சியரு
ளம்மைகாமாட்சியுமையே. (அ)

இக்கணந்தன்னிலோ வினிவருகணத்திலோ
இரவிலோவருபகலிலோ
இன்றையோநாளையோ நனவிலோகனவிலோ
இருளுறுசுழுத்திதனிலோ
இக்கனையமொழிமாதர் போகத்திலோவுண
விசைந்தருந்தும்போழ்திலோ
இல்லிலோவெளியிலோ சொல்லிலோநின்னுமை
மெண்ணுமொருவேளைதனிலோ
எக்கணத்திச்சடல மேகுமோவீதிவ
ணிருக்குஞான்றேயுணர்வருள்
இறைநீதிமறையாதி யிடையாதிமுடிவோதி
யெண்ணுதற்கரிய்சோதி
அக்கமணிநீறணியு முக்கணிறைவற்கினியை
யணிமேவுதஞ்சைநகர்வாழ்
அம்மைதீர்மாட்சியமை மும்மைசேர்காட்சியரு
ளம்மைகாமாட்சியுமையே. (௬)

இகமுநீபரமுநீ யென்னுயிர்த்துணையுநீ
எங்கணும்வியாபிநீயே
இருண்மாயையோட்டுமெய் யருண்ஞானகிரணநீ
எண்ணியவெலாந்தருங்கற்
பகமுநீயயனாதி யைவர்க்குமைந்தொழிற்
பயிற்றுகாரணதெய்வநீ
பகர்மறைப்பொருளுநீ வாசாமகோசரப்
பராதுரியவடிவுநீசிற்
சுகமுநீயச்சுகா தீதநீநின்மகிமை
தொண்டனேனோதவெளிதோ
சுயமோனியருண்மேனி மிகுமானிபிரதானி
சுத்தநிர்க்குணிபவானி

அகமலர்ந்தினிதடியர் முகமலரவருள்செய்வை
யணிமேவுதஞ்சைநகர்வாழ்
அம்மைதிர்மாட்சியமை மும்மைசேர்காட்சியரு
ளம்மைகாமாட்சியுமையே. (௧0)

பொய்யாதவாய்மையுஞ் சிவகாருண்யமும்
பொறுமையும்பிறரியற்றும்
பொல்லாங்கையெண்ணுத நல்லோர்கணட்புமெப்
போதுமொருவர்க்குவஞ்சஞ்
செய்யாதசீலமுந் தையலர்கண்மையலிற்
செல்லாதநல்லமனமுஞ்
சித்தமுறுகல்வியு நித்தமுனைமறவாத
செல்வமுந்தந்தருளுவாய்
கையயிரண்டுடைய செய்யவேளமுதுண்ட
களபகும்பத்தனத்தி
கனசித்திதருமுத்தி வடிவத்திசிவசத்தி
கமலமலராசனத்தி
ஐயாறுமூவர்துதி செய்யாதிதெய்வமே
யணிமேவுதஞ்சைநகர்வாழ்
அம்மைதிர்மாட்சியமை மும்மைசேர்காட்சியரு
ளம்மைகாமாட்சியுமையே. (௧௧)

வாழி.

மாதவத்தறிஞர்வாழ்க வளம்பெறுந்தஞ்சைவாழ்க
ஓதுமிப்பதிகங்கற்போ ருணர்வுடன்கேட்போர்வாழ்க
வேதவேதாந்தம்வாழ்க வெள்விடைவிமலன்வாழ்க
மாதுகாமாட்சியம்மை மலர்ப்பதம்வாழ்கமன்னே.

தஞ்சைமாநகரம்-காமாட்சியம்மைபதிகம்

முற்றிற்று.